**செய்தி வெளியீடு எண்: 325** **நாள்:20.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (20.6.2013) சென்னை, காமராஜர் சாலை, போர் நினைவு சின்னம் அருகில் 1 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவை திறந்து வைத்தார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952–ஆம் ஆண்டு அமைக்கப் பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2012–ஆம் ஆண்டில் 60 ஆண்டுகள் நிறைவு செய்ததையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா 30.11.2012 அன்று சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவினை மக்கள் என்றென்றும் நினைவு கொள்ளும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவு, சரித்திரப் புகழும், பாரம்பரியமும் வாய்ந்த புனித ஜார்ஜ் கோட்டையின் பொலிவிற்கு ஏற்றவாறு கம்பீரமான தோற்றத்துடன் போர் நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடத்திற்கு பொருத்தமாகவும், பாரம்பரியம் மற்றும் நவீன கட்டடக் கலை நுட்பத்திறனை உள்ளடக்கி அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அதன்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவு அமைப்பதற்கு 29.10.2012 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவின் கட்டுமானப் பணி குறுகிய காலத்தில், சிறந்த முறையில் 1 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 108 அடி அகலம், 54 அடி உயரத்துடன், புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் போர் நினைவுச் சின்னம் ஆகியவற்றின் கட்டடக் கலை அமைப்பைப் போன்று, சென்னை, காமராஜர் சாலை, போர் நினைவு சின்னம் அருகில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு வாய்ந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், பொதுப் பணித் துறைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 20.6.2013